


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 06.10.2018


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்
- விருதுகள்
- பொருளாதார நிகழ்வுகள்











# தமிழக நிகழ்வுகள்

- **Economics Time (ET)** நடத்திய 6வது கிராமப்புற உத்தி மாநாடு – 2018 (**ET Rural Strategy Summit – 2018)** புது டெல்லியில் நடைபெற்றது.
  - இம்மாநாட்டில் **கிராமப்புற மேம்பாட்டில் சிறந்த மாநிலத்திற்கான விருது தமிழ்நாடு-க்கு** வழங்கப்பட்டுள்ளது.

# இந்திய நிகழ்வுகள்

- கனடாவின் பிரேசர் நிறுவனம், சிவில் சமூக மையத்துடன் **(CCS – Centre for Civil Society)** இணைந்து 2018ம் ஆண்டிற்கான பொருளாதார சுதந்திரக் குறியீட்டை **(Economic freedom Index – 2018)** வெளியிட்டது. உலகின் 162 நாடுகள் அடங்கிய இந்த பட்டியலில் இந்தியாவானது **96வது** இடத்தில் உள்ளது.
  - இந்தக் குறியீட்டில் ஹாங்காய் முதலிடத்திலும், சிங்கப்பூர் 2வது இடத்திலும் உள்ளது.
- குறிப்பு:
  - 2017ம் ஆண்டிற்கான பொருளாதார சுதந்திரக் குறியீட்டில் இந்தியா **98வது** இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

- மகாராஷ்டிராவின் ரத்னகிரி, சிந்து துர்க் ஆகிய பகுதிகளில் விளையும் மாம்பழங்களின் அரசன் என்று அழைக்கப்படும் **அல்போன்சா மாம்பழங்களுக்கு** புவிசார் **FwpaPL (Geographical Indication)** அங்கீகாரம் கிடைத்துள்ளது.
  - உலக அளவில் புகழ் பெற்ற இம்மாம்பழம், ஜப்பான், கொரியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உட்பட பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.
- குறிப்பு:
  - இந்தியாவில் டார்ஜிலிங்கில் விளையும் டீ முதல் முறையாக

2004ல் **GI** (புவிசார் குறியீடு) பெற்றது குறிப்பிடத்தக்கது.

- மகாராஷ்டிராவின் புனேயில் லோனி கல்சார் பகுதியில் உள்ள மகாராஷ்டிரா தொழில் நுட்ப நிறுவனத்தின் **(MIT – Maharashtra Institute of Technology)** உலக அமைதி பல்கலைக் கழக வளாகத்தில் **(World Peace University)** உலகின் மிகப் பெரிய குவிமாடம் **(World Largest Dome)** திறக்கப்பட்டுள்ளது.
- குறிப்பு:
    - மகாராஷ்டிராவில் பக்தி இயக்கத்தின் முக்கிய நபராக விளங்கிய 13ம் நூற்றாண்டின் கவிஞரும் தத்துவ ஞானியுமான ஞானேஷ்வரின் பெயர் இம்மாடத்திற்கு சூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நியமனங்கள்

- இந்திய தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் **(National Legal Services Authority of India - NALSA)** நிர்வாகத் தலைவராக உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான மதன் பீமாராவ் லோகுரை குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார்.
    - இவ்வமைப்பானது **(NALSA),** இந்தியாவில் உள்ள எந்த நீதிமன்றங்களிலும், தீர்ப்பாயங்களிலும் வழங்குரைஞர்களின் சேவைகளைப் பெற முடியாத ஏழை மக்களுக்கு சிவில் மற்றும் குற்றவியல் நடைமுறைகளில் இது இலவச சட்ட உதவிகளை வழங்கி வருகிறது.
- குறிப்பு:
    - **NALSA** – ஆனது 5, டிசம்பர் 1995ம் நாள், சட்ட சேவைகள் ஆணையச் சட்டம், 1987ன் படி அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# முக்கிய தினங்கள்

- சர்வதேச அகிம்சை தினம் - அக்டோபர் 02 **(International non-violence Day - October – 02)**
  - கல்வி மற்றும் பொது விழிப்புணர்வு மூலம் அகிம்சைக்கான கொள்கைகளை ஊக்கப்படுத்துவதற்காக, மகாத்மா காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 02 அன்று உலகம் முழுவதும் சர்வதேச அகிம்சை தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2007ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இத்தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

# விருதுகள்

- 2018ம் ஆண்டின் **அமைதிக்கான நோபல் பரிசு** காங்கோவைச் சேர்ந்த மருத்துவர் “**டெனிஸ் முக்வேஜாவும்’,** ஈராக்கைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் ‘**நாடியா முராத்துக்கும்**’ வழங்கப்பட்டுள்ளது.
- குறிப்பு
  - நாடியா முராத், பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தலை தடுக்கும் ஐ.நா. அமைப்பின் தூதராகவும் முராத் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது

- தெற்கு சூடான் நாட்டைச் சேர்ந்த டாக்டர். **ஈவன் அட்டார் ஆதாஹா,** என்பவருக்கு ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமை அமைப்பின் 2018ம் ஆண்டிற்கான நான்சென் அகதி விருது **(2018 NHCR Nansen Refugee Award)** வழங்கப்பட்டுள்ளது.

We Shine Academy TM

# பொருளாதார நிகழ்வுகள்

- உலகளாவிய வர்த்தக உத்திகளில் இந்தியாவின் எதிர்கால ஈடுபாட்டினை மதிப்பாய்வு **(India’s Global Trade Strategy)** செய்வதற்காக ‘சுர்ஜித் எஸ். பல்லா’ தலைமையில் உயர்மட்ட ஆலோசனைக் குழு ஒன்றை **(High Level Committee)** வர்த்தக அமைச்சகமானது அமைத்துள்ளது.

We Shine Academy™